(3) அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனைவரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய பேரவையின் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்கல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்கல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பட்டிருக்கிறது.

(இ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மை பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பட்டிருக்கிறது.

(5) 1971-72-ம் ஆண்டுக்கான நிதி கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண் 8-A—பால் வழங்கு திட்டங்கள்.

(ஆ) நிதிக்கோரிக்கை எண் 9-A 1959-ம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

கோரிக்கை எண் 8-A—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,07,86,800-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாவட்ட வாரியாக பால் பண்ணைகள் பெரிய அளவில் ஆரம்பிக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க "கோரிக்கை எண் 8-A-பால் வழங்கு திட்டங்கள்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,07,86,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்று பிரேரேபிக்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, பால் உற்பத்தி பெருக்கத்திற்கு மேய்ச்சல் காடுகளை விரிவுபடுத்துவதுபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 8-A—பால் வழங்கு திட்டங்கள்—என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டிருக்கும் ரூ. 4,07,86,800-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்று கோருகிறேன்.

DR. H. V. HANDE : Sir, to point out the need to streamline the working of the Madhavaram Milk Project, I move the cut motion standing in my name, namely :—

"That the allotment of Rs. 4,07,86,800 under Demand No. 8-A—Milk Supply Schemes be reduced by Rs. 100".

THIRU A. SUBRAMANIAM : Sir, to discuss the inadequacy of milk supply schemes, I move the cut motion standing in my name, namely :—

"That the allotment of Rs. 4,07,86,800 under Demand No. 8-A—Milk Supply Schemes be reduced by Rs. 100".

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :

கோரிக்கை எண் 9. A—1959-ம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம்—என்ற தலைப்பின் கீழ் ரூ. 52,72,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS